உ
சிவமயம்

# சந்திர தீபம்

இதழ் - 1 பிங்களவருஷசம் மாசிமாதம் 19 ம் திகதி வெள்ளிக்கிழமை (3-3-78) சுடர் -

# சிவன் இரவு சிவஒளி தரிசனம்

## நோற்பார் எவர்க்கும் நீங்காத நலம் தரும் இரவு

### அருள் ஒளியாய சிவன் அறியப்படாதவன். அவன் அன்று வந்து தோன்றிய அற்புதவரலாற்றைக் கொண்டது சிவராத்திரி.

சிவராத்திரி சிவன் தோற்றிய புண்ணியத்தைக் கொண்டதால் இந்த இரவு சிவன் இரவு என விசேடமாயது. அத்தினத்து உபவாசமாக உணவின்றி இருந்து இரவு முழுவதும் துயில் நீங்கி தூய்மையுடன் நான்கு யாமமும் எம்பெருமானை அர்ச்சித்து வழிபட்டால் நன்மை பெருகும்.

தோன்றுத்துணையாகி உள்ளத்துள் ஒளியாக இருக்கும சிவன் அன்று ஒரு நாள் அகிலமும் படைத்த அண்ணல் பிரமனும் அகிலமும் காக்கும் கடவுள் நாராயணப் பெருமானும் அவர்கள் தாமே தலையாய பரம் பொருள் என இருவரும் வாதிட்டு போரிட்டு அப்போரினுல் உலகிற்கு தீங்கினை விளைத்திடலும் அஃதுநண்ர்து அவர் முன்னுகை அடியும் முடியும தேடியும் அறியொணுத நீண்ட ஓர் சோதியாய் தோன்றி தன் அருளால் அவர் போரை நிறுத்தி அவர்க்கு அருள் புரிந்த சிறப்புடையது சிவராத்திரி. இந்த வரலாற்றை அன்று சிவன் தோற்றிவர நேரில். கண்டு தரிசித்து அருள் பெற்ற பிரமதேவர் தனது மகன் தக்கனுக்கு எடுத்து மொழிகின்ற முறையாக அந்த வரலாற்றை கீழேகாண்கின்றீர்கள்.

முன்பு ஒருகால் சிவன் அருளாலே வளமும் சிறப்பும் பெற்ற தக்கன் என்னும் பிரமதேவரின் மகன் ஒருவன் தனது செல்வத்தின் மகத்துவத்தால் சிவனையும் நித்தித்து அதுமட்டுமன்றி வேதங்கள் ஆநாதியே தொட்டு சிவனே பரம் பொருள் அவனுக்கே ஆகுதியில் முதல் அவி என்ற வேதவழியையும் மாற்றி தான் ஓர்யாகம் செய்தான். அந்த யாகத்து வந்து அவன் செய்வது தவறு என பெரியோரும் வேதமும் எடுத்து மொழிந்தும் அதுவும் அல்லாது சிவன் அருளால் தன்னிடத்து மகளாகி வளர்ந்தது அம்பாள் வந்து நற்புத்தி சொல்லியும் தன் அகந்தையால் இறுமாந்து அவர்கள் சொல் கேளாது சிவனது முதன்மை நீக்கி யாகம் செய்தான் அந்தக்கொடிய தக்கன். உண்மைப் பொருளைவிளங்காதஅதனுல் அவன் யாகம் வீரபத்திரக் கடவுளால் அழிக்கப்பெற்றது. யாகத்து தக்கனுடன்இருந்த எல்லாத்தேவர்களும் தண்டிக்கப்பட்டார்கள். தக்கனும் தலைவெட்டப்பட்டு கொல்லப்பட்டான். பின்னர் எம்பெருமான் சிவன் அம்பாளுடன் அங்கு தோன்றி யாவர்க்கும் அருள் புரிந்து இறந்த தக்கனையும் முன் இருந்த அவன் தலையை நீக்கி ஆட்டுத்தலையை வைத்து பொருத்தி எழுப்புகின்றூர். ஆட்டுத்தலையுடன் விதிக்கும் பெரும்நிலையுடைய தக்கன் எழுந்து நிற்கின்றுன். சிவபிரான் அம்பாளுடன் மறைந்த பின்னுகை அங்கு நின்ற தேவர் கூட்டத்து தக்கனது முகத்தை நோக்கி இந்த சிவன் இரவுவரலாற்றை பிரமதேவர் தக்கஉ கேட்டு உய்யுமாறு சொல்கின்றூர்.

மகனே நீ எதனை முன்னர் என்னிடம் கேட்டு உணர்ந்தாய், பின் என்ன செய்தாய்; அந்த தவம் இயற்றுங்கால் என்ன எண்ணினுய்; யாரிடம் இருந்து இச் செல்வ வளம் யாவும் பெற்றனை? அதன் பின் நீ என்ன செய்தாய்? அதனுல் என்ன அநுபவித்தாய்? இப்போது இங்கு நீ என்ன பெற்றுய்? இனிமேல் உனது எண்ணம் எப்படி? உனது ண் செயலால்அழிவென்பதிலாத தேவர் யாவர்க்கும்; தவத்தின் உறுதியான வலியுடைய முனிவர்க்கும்; பூமி மீது வாழ்கின்ற பிராமணர் கூட்டத்திற்கும் யாரையும் கொன்று உயிரைக் குடிக்கின்ற இயமன் ஆயினுய் உனதுசகல சிறப்புகளையும் தொலைத்தாய்; சிறப்புடைய தக்கன் என்ற பேரையும் தொலைத்தாய்; பேயனுகி நின்று உனது அழகையும் தொலைத்தாய். உனது குற்றேவலைச் செய்திடும் எல்லாரையும் தொலைத்தாய் இப்பொழுதுநீ பெரும் துயரப் பட்டாய். உனது யாகம் புரிந்தசெயலில்உன்னுடைய உணர்வேயல்லாது நிகரற்ற பெரியோர்கள் உன்னிடம் சொன்னதும் நீ உணர்ந்தாயல்ல, முன்னைய ஊழின் பிரகாரம் இந்த நிலைக்கு வந்துள்ளாய். எம் பெருமானை நீ இகழ்ந்தாய். அப்பெருமானுடைய உயர்ந்த நிலைமுழுவதும் தெரிந்தவனுகிய நீஅப்படிச்செய்யலாமா? உனக்குகிடைக்காதசிறப்புடைய செல்வப் பேறுகள் யாதனையும் பெற்று அதன் காரணமாக ஈசனுடைய மேன்மைகள் யாவற்றையும் மறந்துள்ளாய். இப்படியான மயக்கம் நின்னளவன்று. இந்த உலகில் உள்ள எல்லா உயிர்த்தொகைக்கும் உண்டு, ஆனதன்மையால் நீயும் மயக்கினை அடைந்தாய் போலும். வேறு நீ என் செய்வாய்? அதுபோழ நன்கு முழு உணர்வையும் பெற்று யாவற்றையும் படைத்திடப் பெற்ற எம்மிடத்தும் முன்னேர் நாள் மிகவும் பெரிய மயக்கம் வந்துள்ளது. அதனைக் கண்டு இன்று போல நெற்றிக் கண்ணுடைய சிவமூர்த்தி அன்று எமது அறியாமையை தமது சிறந்த கிருபையின் அருளால் நீக்கினுர். ஆதலால் தக்கனே; திருவருள் நிறைந்த மல பந்தமிலாத ஆனவான சிவபெருமானின் பாத கமலங்களை நீ அன்புடன் அருச்சனை புரிவாய். அதன் பயனுல் ஆட்டுத்தலையுடன்துயரப் படுகின்ற உனது பாவ செயலை நீக்கி ஞான வாழ்வுடன் நல்லருளினைப் புரிவான எமபகவான் சிவன் என்று பிரமதேவர் கூறலும்.

ஆட்டு முகமுடைய தக்கன் அதற்கு இசைவு கொண்டு தந்தையே நான் உய்யும் மார்க்கத்தைச் சொன்னீர். அஃதிருப்ப உங்கள் பால் முன்னர் அடைந்த அறியாமையும் எம்பெருமான் சிவன் அருள் செய்ததும் ஆகிய அந்த கிருபையுடையவரலாற்றை நானும் அறிந்து தெளிவு கொள்வதற்காக சொல்லிடுவீராக என்றலும்.

பொன்னுகிய பெரும் நூற்றிதழ்த்தாமரைப்பூவில் இருந்தருளும் பிரம தேவர் தனது மைந்தன் தக்கனுடைய பெருமுகத்தை நேர் நோக்கி மகனே முன்னமும் இதனைக் கூறினேம் இன்னமும் அக்கதையை நாம எடுத்து ஓதிடுவோம் நன்றதனைக்கேள் என்று சொல்லத்தொடங்குவார்– நான்கான திக்கிற்கும் நான்குமுகமுடைய பிரமன்; அந்த வரலாற்றைதான் சொல்லுமுன்; முன்னுள் திருமாலுடன்பலநாட்களாக போரிட்டு தாமே மேலானபொருள்என சாதிக்க நின்ற காலையில்: பரம்பொருள் நீரன்று நாமே என சிவபெருமான் அவர் நடுவே அக்கினி மலையாகத் தோன்றிய சோதியின் திருவுருவைச் சிந்தித்து தொழுது; தக்கனுக்கு இவை கூறுவான்'

தக்கனே கேள்! ஆயிரம் சதுர்யுகங்கள் சேரமுடியும் காலத்தில் எனக்கு அது ஓர் பகற் காலமாகும். அந்தப் பகற் பொழுது மாலைக் காலமுடன் சென்றிட, எனக்கு இரவாகும். அந்த இரவாகும் ஆயிரம் சதுர்யுகங்களிலும் நான் நித்திரையில் பொருந்துவேன். (சதுர்யுகம் என்றுல் கிரேத திரேத துவாபர கலியுகம் என நான்குயுகமும் சேர்ந்தகாலம் இந்த நான்கு யுகமும் சேர்ந்த காலத்தில் ஒவ்வோர் யுகத்திலும் பூமி இருந்தளவு காலப்படி இல்லாது நீராக இருக்கின்ற காலமும் இருந்தளவு காலஎல்லைக்குச் சமமாக உண்டு. இப்படி ஒவ்வொரு யுகத்திற்கும் ஏற்பகணக்கிட்டு அந்த நான்குயுகங்களுக்கும் கொள்க. இந்த வண்ணமே மனிதராய் எங்களுக்கு ஒருவருடமான 365 நாட்கள் சேர்ந்தால் தேவர்களுக்கு ஒருநாளாகும். இந்த வண்ணமாகவே பிரம தேவர்க்கு ஆயிரம் சதுர்யுகங்கள் ஓர் பகற் பொழுது எனவாகும். என்க அந்தபகற் பொழுதான ஆயிரம்சதுர்யுக காலம் போல் இரவுபிரமற்கு ஆயிரம்சதுர்யுகம்) அவ்வாருக நான் நித்திரை செய்திட அக்கினியாய ஒளி ஒடுங்கும், சூரியன் அழிவுறும். பெரிய சந்திரனும் அழிவுறும். நட்சத்திரங்களும் அழிவுறப்பெற்று கிரகங்களும் அழிவுறும். இவையன்றி மேலான குலிசப்படையுடைய இந்திரன் முதல் தேவர்களது கூட்டம் யாவும் அழிவுறும். சகல உலகும் தோற்றமின்றி ஒரேபிரளையநீராக அழிந்துபோகும்.

அந்த நாளில் பூவுலகினில் பிறக்கின்ற உயிர்கள் தோற்றமெடுக்க முடியாத அளவில் அழிவுற்று முடிவாகும். எல்லா உயிரினமும் தேய்ந்து தேய்ந்து தோற்றிடமுடியாது சக்தி யற்று நின்று விடும். படைக்கின்ற யான் துயில எந்த ஒரு விதமான உயிரும் தோற்றமெடுத்து வாழ்ந்திட முடியாது. அப்படி எல்லா உயிரும் பொருளும் தேய்ந்து தேய்ந்து அழிந்திடலும். இதுவேளை வான பதங்களில் வாழ்கின்ற முனிவர் இந்த அழிவின் பெருக்கத்தைக் கண்டு திடுக்குற்றுப் பயந்து நடுங்கினராய் எல்லாருமாக சிறந்து சொல்லப் பெறும் சனலோகத்திடத்து அந்தநாளில் பயத்துடன்செல்வார்கள். நான் நித்திரைசெய்யமண்ணிற்குபெரும் அழிவினைச் செய்யும்படி சமுத்திரங்கள் நான்கு புறமும் விரைவில் எழுந்து; காமாட்சி அம்மையார் தவம் செய்கின்ற காஞ்சி முதல் சீகாழி ஆகிய நகரங்களை நீக்கி; இப்பூமி முழுவதையும் மூடி உண்டு ஒரு பாகம் அதன்மேலும் எழுந்து ஏழாகிய பாதாள உலகங்களையும் உண்டுஎழும் நீர் சக்கரவாள மலையைச் சூழக்கொண்டு இப்பூமி முழுவதையும் ஆழ்ந்த பாதாள உலகங்களுடன் சேர அழித்து; மேல் தேவர்கள் உலகையும் மூடி நிமிர்ந்தெழுந்து அப்பாலும் அப்பிரளய நீர் சென்று பெருகிடும் அந்த நீரே உலகம் எல்லாவற்றையும் நீராக மாற்றியிடும். மண்ணே நீராகமாறிடும் பெரும் பெருக்கான அந்தப் பிரளயநீர்மேல் மிதந்த ஓர்ஆலிலையின்மீது அழிவுற்ற உயிர்களை தன்வயிற்றில்அடக்கிக்கொண்டு; வானின்மேல் உலவுகின்ற குளிர்ந்த இளம்பிறை சூடிய சிவபெருமானின் திருவடிகளை உள்ளத்து தியானித்தவாறு ஓர் குழந்தை வடிவாகி அடர்ந்த துளசிமாலை சூடிய முடியுடைய நாராயணக் கடவுள் யோகநித்திரை செய்வார்.

அவர் யோகநித்திரை செய்கின்ற அத்தன்மை கண்டு; சனலோகத்திருந்த முனிவர்கள் யாரும் நாராயணனைப் புகழ்ந்து துதித்திட அப்பெருமான் அங்கு யோக நித்திரை நீங்கி எழுந்து முன்புள்ள பூமி எங்கே எனத்தேடலும்; அப்பூமி பாதாளத்திருப்பதை உணர்ந்தவராய் அதைக்கொண்டு வர நினைந்து அவர் ஓர் வெள்ளைப் பன்றி வடிவானுர். பன்றிஎனும் வடிவு கொண்டு பாதாளத்துச் சென்று; எங்குற்றது பூமி என அறிந்து தேடி அப்பூமியைத் தனது சிறந்த கொம்பின்மீதிருத்தி விரைவில் எடுத்துக்கொண்டு மீண்டுவந்து முன்பு போல எவற்றிற்கும் மூலமாக அப்பூமியை வைத்தபின் அழிவை அகற்றி காத்தேன் என்ற வலியுடன் போயினுர் திருமால். இது இப்படியாக நிகழஎனக்கு உற்ற இராப்பொழுதாகிய ஆயிரம் சதுர்யுகங்களும் நீங்

(மறுபக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட, எனக்கு பகற்காலம் வந்தது: அப்போது நான் நித்திரையின்
நின்றும் நீங்கி உலகு உயிர்களைப் படைத்திடும் முகமாக என் மனதில்
நினைந்த நேரத்தில் பிரளய நீராகப் பெருகிய சமுத்திரங்கள் எல்
லாம் தாம் நிற்கவேண்டிய பழைய நிலையின்படி அந்த அந்த உலகு
களிற் சென்று பூமியைவளைத்து நின்றன.

ஆனல் பூமியை நிறுவிவைத்த நாரயணப் பெருமான்
சிறப்புக்கொண்ட பாற்கடலினிடத்து சென்று அங்கு அனந்தன்
என்னும் பாம்பினது சயனத்தின் மீது; இப்பூமியை எனது
கொம்பில் வைத்து எடுத்துவந்து இருத்திளும் நாம் என்ற
மனதில் கொண்ட அகந்தையோடும் யோகநித்திரை செய்திருந்
தார். அவ்வாருகிய காலையில் யான் அளவிலாத தேவரை, அசு
ரரை மனிதருடன் விலங்குகளை பறவைமுதல் ஏனைய உயிர்த்
தொகைகளை யாவற்றையும் படைத்து; அவ்வுயிர்கள் யாவும்
இருந்திடவேண்டிய அந்த உலகுகளில் சிறந்து பெருகும்படி வைத்
தேன். தலைமைபொருந்திய இந்திரனை வான உலகின் அரசாட்
சியில் யான் நியமித்து வைத்து: அவன் நீங்கிய மற்று எட்
டுத் திக்குப் பாலகர்கள், அக்கினி, இயமன், நிருதி, வருணன்
வாயு, குபேரன், ஈசானன் ஆன இவர்களை அவர்க்குரிய இல
யங்களில் வைத்து அவரை இயங்கச்செய்து இவையான செயலாக்
என்பெருமையைவியந்து நெடிது நினைந்து; இதனல் என்னைய
ல்லாது ஓர்கடவுள் வேறு இல்லை என எண்ணிக்கொண்டேன்
முன்நான் நித்திரை செயும்போது முடிவிலாத உயிர்த்தொகை
யான இவை யாவும் ஒடுங்கும்; பின்னர் யான் எழும்போது
இவை யாவும் எழும், ஆதலால் இவர்க்குத் தஞ்சம் நானேதான்
எனையன்றி இவர்க்கு வேறு தந்தையில்லை. யார்க்கும் மேலாக
உயர்ந்த பொருள் நான் என்று எண்ணி என்னை வியந்து அத்து
ணிவுடன் உயரச் சென்றுமேல் உலகமும்திக்கும் ஏனைய முன்னை
ய பூமிகளையும் மேருமலையுடன் சூழ்ந்த கடல்கள் ஏழையும் அங்
கங்கு விரைவாகத் தோன்றி எழும் உயிர்க்கூட்டங்களையும் இவை
யல்லாத எல்லையற்ற பொருளையும் யான் மிகநீண்டநேரம்பார்
த்து இப்பொருள் அனைத்தும் யான் படைத்தது என்ருல் எனக்கு
ஒப்பாயவர் வேறு இல்லை என்று என் உள்ளத்தில் எண்ணினேன்.
அந்த நேரத்தில் நல்ல அமுதம் தரும் பாற்கடலிடத்தாக சக்க
ரப்படையைக் கையில் ஏந்திய மேகவர்ணக் கடவுள் திருமால்
தாமே இவற்றிற்குக் காரணம் என்ற அகந்தையுடன் துயில் புரி
வதைக் கண்டேன். எனக்கு என்னை அறியாது கோபம் வந்தது.
அன்று அப்படியாகஅவனைக். காக்கும் கடவுள் என் தந்தை திரு
மால் என அறிந்தும் அவன்பால் சென்றேன். சென்று அவரின்
சிறந்த நீலமணி போலும் நெஞ்சிமீது எனது வலிமை யான
கைகொண்டும் அடித்து உனது இனிய நித்திரையைவிடு
த்து எழுவாய் என்று நான் கூறலும் அவன் துயில் நீக்கி எழுந்
தான்எனது வாக்கை ஏற்று எழுந்த நாரயணனை நோக்கி நீயார்
சொல் என்று நான் கேட்டேன் அவன்உடன் என்னை நோக்கி
நான் உனது தந்தை இதனை நீ அறியாயோ? நான்கு தலையுடைய
என் மகனே என்று அவன் சொன்ஞன். நான் சிரித்து நீ நித்திரை
யால் எழுந்தாய்ஆனல் உனக்கு தெளியவில்லையோ என்று கேட்
டு; திருமாலே எனக்கு நீர்; இவ்வுலகில் ஓர் பிள்ளையின் தந்தை
என வந்தவர் தமது மைந்தனை நோக்கி; நான்தான் உன் தந்
தை எனச்சொல்கில்ற வார்த்தை போல என் முன்ஞல் இதைச்
சொன்னீர். இது முறையல்ல. நான்தான் உனது தந்தை என நீ
நினை. உனது உந்தியில் நான் வந்தேன் என்ருல் அந்த உண்மை
நீ உணராது உனது மைந்தன் யான் என உன் மனத்து எண்ணி
ஞய் விறகிலே அக்கினிக் கடவுள் தோன்றிஞல் அந்த அக்கினி
க்கு விறகு தந்தையாகுமோ. அது பிழையான வார்த்தையல்ல
வோ, அதேபோல் நான் உனது உந்தியில் தோற்றியமைந்தன்அன்
று. நினது தந்தை நீயே என உன்னை பிதா மகன் என நீ வியந்
தாய். அதனை விடுத்திடுவாயக. நீ உனது அரிய தவத்தின் வலி
மையால் நரசிங்கமூர்த்தியாக முன்னம் ஓர் தூணிடை தோன்
றிஞய். அத்தன்மையால் அந்தத் தூண் உன்னிலும் பார்க்கமே
லான பொருளே? தூய பிருகு முனிவரது மனைவியைக் கொன்ற
தஞல் அவர் சொல்லிய சாபத்தால் உனக்கு உற்ற பத்துப் பிறப்
பினை அடிக்கடி நீ எடுத்தாய். அப்பிறவியின் உன் உடல்கள்
அனைத்தையும் நாமே படைத்தனம். படைத்து எனது கையே
சிவந்துள்ளது. திருமாலே! நீ இதனைக் கண்டிடுதி என்று இந்த
வார்த்தையைச் சொல்லலும் கோவர்த்தன கிரியை எடுத்து
குடையாகப் பிடித்த கரமும், மேகம்போல் மேனியும் உடைய
நாராயணர்; என்னை நோக்கி நன்ருயிருக்கிறது உனது வார்த்
தை என்று தலையை ஆட்டி சிரித்து கோபத்தால் தனது கைகளை
மளமள வெத்னதட்டி பின்னர் இவற்றைச் சொல்வார்.

பிரமனே! நஞ்சுடைய நாகமணிந்த சிவபெருமான் முன்னர்
உன் ஐந்து தலையில் உச்சியில் இருந்த தலையை நகத்தால் கிள்ளி
எடுத்திட அதஞல் நீ. மயங்கி வீழ்ந்தாய். அன்று அறுபட்ட அந்த
உன் தலையையே இன்றுவரை நீ படைத்து வைத்தாயில்லை.
அது தெரியாத நீ நன்று நன்று என்னைப் படைக்கின்ற வாறு
இதனைக்கேள் உன்னை அன்பால் முன்னர் பெற்றெடுத்த தா
யும் நான். அன்றியும் உன்தந்தை யான். உனக்கு ஏற்றதொரு
கடவுளும் நான். உனது குரு நான் எனது மகனே நமது வலி
யால் வந்துஉன்னைப் பீடித்த மாயையால் இன்று நீ இவ்விடம்
மதிமயக்கம் அடைகின்ருய் போலும். இதனை நீநன்கு உணர்.இவ்
வுலகில் பொன் இல்லாமல் ஆபரணங்கள் தோன்றமுடியுமோ?
ஓர் அரசன் இலாது கட்டுப்பாட்டுடன் மக்கள் இருக்கமுடியு
மோ? பெரியபூமி இலாது இங்குள்ள தகுதியான வளங்கள்
இருக்கமுடியுமோ? அதேபோன்று என்னை இலாது இருக்க
முடியுமோ எந்த ஒரு சரம் அசரமாய விளங்கும்எப்பொரு
ளும்.உலகில் எவரையும் எண்ணுவிப்போனும் யான். எல்லாரி
டமும் அவரவராகி நின்று எண்ணுகின்றவனும் நான் புந
வமத்தியில் நின்ற மூலப்பொருளும் நான், காணப்படும் கண்
முதலிய பொருள்களும் நான்; அடைதற்கரிய கடவுளும்
நான். நாராயணு எனப் போற்றப்படும் நாதன் நான்.
மேலான வான உலகங்கட்கு தலைவன் நான். வேதங்களா
வனநான். வேதத்தின் உட்பொருள் நான்.எல்லாம் தோற்ற
ற்கு] கருவாகஉள்ள மூத்த ஆதிப் பொருள் நான். காணப்படும்
உருவம் ய வும் நான். தோன்றிடாத அரூபி நான். இருள்
நான். ஒளியாய சோதி நான். எவற்றிக்கும் தலைவன் நான்.
தூயவன் நான். சகல மாயங்களிலும் வல்ல மாயை நான்
எல்லாம் நான். பூதங்கள் யாவும் நான். எல்லாரும் நானே
சிவனுடைய பாதிஉமையும் நான், சிவனும் நான். மேலான
பிரமமெனும் பொருளும் நான், இதை நீஉன்சிறுமையால் அறி
யாய்என்று திருமால் பற்பல வார்த்தைகளைச் சொல்லிடுதலும்
யான் அவர் எதிர்சென்று நின்று அட்டகாசமுற்று; அப்படி
யாயின் இருவோரும் போரினைச் செய்வோம். அப்போரில்வெ
ற்றிஅடைந்தவர தலையானவர். எழும் போரிட என்றலும்
வலியாய போரினைப் புரிந்திடற்கு திருமாலும் எதிரேற்றெ
ழுந்து ஓர் வில்லை எடுத்து வளைத்து இயமாஸ்த்திரம் முதலாய
கொடிய பெரும் படைகளை தடுத்திட முடியாத வகையால்
விரைவில் என் மேல் செலுத்தலும் நான் கண்டு தருப்பை
களால் புரிந்த அந்த அந்த படைகளை விடுத்து அவர் படை
களை அழித்திட அதுகண்டு திருமால் தனது படையாய
நாராயணஸ்திரத்தை எடுத்து விடுதலும் அது வருதல் கண்டு
யான் என் பக்கரில் இருந்த என் பிரமாஸ்திரத்னத எனது
அழகிய கையால் எடுத்தேந்தி நின்று அப்படையைச் செலுத்
த; எனது பிரமாஸ்திரம் சென்று அவரின் நாராயணஸ்திரத்
தைத் தடுத்து மீண்டது.பின்பு ஆதியாய் யார்க்கும் ஒப்பரிய
சிவபெருமான் கொடுத்திடப் பெற்றது, தேவர் எவருடைய
பெரும் படைகட்கு நாயகமானதுமான சிவப்படைக் கலத்தை
கரிய மேகம் போலும் திருமேனியுடைய திருமால் வணக்
கம் செய்து தன்கையில் எடுத்துக் குற்றமில்லாத பூசனைகள்
யாவற்றையும் திருமால் அப்படைக்கு மனதில் கொண்ட
பேரன்பிஞல் செய்து முடித்து அந்த சிவப்படைக்கலத்தை
விடுத்தலும் அப்படை புறப்பட்டு அன்று குறைவிலாத தே
வர்கள் கண்டு ஓடிட மேலெழுந்து செலும் நஞ்சிலும் பார்க்க
கொடியதெனும்படி வந்த நேரத்தில் எனக்கும் அம்முக்கண்ண
னுடைய சிவமூர்த்தி அதைப்போன்றதொரு சிவப்படையினை
முன்னர் கொடுத்ததனை நினைப்புற்று எடுத்துவழிபாடு புரிந்து
விரைவில் அத செலுத்தினேன். எமது செயலை நோக்கிஞல்
நெருப்பின்மேல் நெருப்பு சென்றது போன்றிருந்தது இந்த
வகைஒரே தன்மையாக நாங்கள் ஊக்கமாக ஏவிய சிவன்
தந்த பாசுபதம் என்னும் பெரும்படைகள் இரண்டும் தம்மில்
தாம போரிட்டு எரிகின்ற நெருப்பின் கொழுந்துகளை எங்க
ணும் சிந்தி. உலகங்கள் எல்லாவற்றையும் அழிவு செய்து திரிந்
தன அவைகள் செலுத்திய பவளம் போலும் சுடர்க்கொழுந்து
டைய அக்கினிச் சுவாலைகள் முதிய வானத்திலும் இப்பூமியின்
பகுதியிலும் வந்திட அதுகண்டு தேவர்கள் யாவரும் வெப்பங்
கொண்டனராகி அஞ்சி நடுநடுங்கி ஏங்கினர். சிதறிதிசை எங்கும்
ஓடினர்.அவ்வாறு ஓடியவர்களில் வீழ்ந்தார் ஓர்சிலர். வெதும்பி அழு
து இறந்தார் ஒரு சிலர். முன்வந்த நஞ்சை உண்டு எமைக்காத்த
கடவுள் திருவடிகளை அபயமாக அடைவோம்என சிறப்புடைய
திருக்கைலாய மலையில் ஓடிச்சென்ருர் ஒருசிலர். அவர் நிலைஅப்படி
யாக இப்படைகளின் நெருப்பால் மேகங்கள் யாவும் கருகியது.
வான உலகுடன் பூமி எலாம் எரிந்தது. சமுத்திரங்களின் எவ்
வகையான நீர் எல்லாம் வற்றி வறந்தன. நிரந்து நின்ற பலவ
கையாகும் உயிர்களின் பேதங்கள் எல்லாம் தொலைந்தன. அது
கண்டும் இரக்கமின்றியே பின்னரும் நாம் போர்செய்தோம்.

இந்தவாறு கொடிய அழிவான போரை நாம் புரிந்திட்ட
நேரத்தில் எமது தந்தையான சிவபெருமான் அருளால் எனது
பெருமுகத்தினின்றும் நராதன் என்னும் குறைகளிலாத ஒரு
பெருமுனிவன் தோன்றிஞன். அவன் எங்கள் முன்ஞக வந்து எமது
செயலை நோக்கி இதனைச் சொல்லத்தொடங்கிஞன் உண்மையை
அறியாமல் நீங்கள் இருவரும் நீரே முதல்வர் என நினைந்து பேசி
அதனை நிலையுறுத்த மேலான போர் சிலவற்றைச் செய்கின்
றீரோ நீங்கள் அப்படி செய்கின்றமையால் ஒரு முதலாய
பிரமம் இலாது நீங்கள் இல்லை. ஆனமையால் உங்களில் ஆர்
முதல்வர்? இருவரும் அந்த பிரமத்தின் பண்புகொண்டீர்.இன்
று எதிர்த்திடும் பெரும் போரினை புரிய நீவிர் எண்ணி
இங்கு வந்த காலத்தும்; உங்கட்கு உரிய உம்படைகளையலாது
இந்த உலகுகள் யாவற்றையும் தொலைக்கின்ற தொரு பயங்
கரம் விளைக்கும் பாசுபதம் எனப்படும் பெரிய படையை
விடுத்திரோ? அப்படையினை உங்கட்கு கொடுத்தருளிய கடவுளை
யும் மறந்தீர்போலும். மறவாதிருந்தால் இக் கொடிய போர் வந்
திராது. அக்கடவுளை மறந்தாலும் அவரிடத்து நீர் பெற்ற எவற்
றையும் அழித்திடும் அப்படையின் சிவ என்னும் நாமத்தை
யும் மறந்துளீரோ? அந்த நல்லநாமத்தை நீள உமது மனதில்
நினைந்து நினைந்து தெளிந்து கொள்ளுங்கள். இனி உமது
போரினை விடும் எனநாரதமுனிவன் கூறி அதன் மேலும் சொல்
வான் நீங்கள் இருவரும் இன்னமும் வாதிட்டு போர்செய்வீரே
எனின் எவற்றிற்கும் முன்ஞகி அருவாகி உருவாகி உள்ள
பிரமம் எனும் ஓர் பொருள் உங்கள் நடுவுறச் சோதியாய்
தோன்றும் காண்பீராக என்று ஞான உணர்வால் நாரத
முனிவன் எமக்கு இது கூறிப்போயிஞன். (ம.பு.பா.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரதமுனிவன் கூறிப்போன இந்த வாக்கை எம் உள்ளத்தில் நாம் கொண்டிலேம்; அல்லது நெருப்பினைப் போன்று சினந்து போரிட்ட எம் கர்வத்தை நீங்கிடமாட்டோம். இப்படி ஆயிரம் ஆண்டுகள் வரையும் நாம் இப்பெரிய புவனங்கள் மாய்ந்திடும்படியாக நாம் போரிட்டோம். அறிவே பெருகுகின்றகொடியஎமது செயல் யாவற்றையும் எல்லாம் முடிவாகும் அக்கினிப்பிரளய ஊழி நாளில் அக்கினியில் நின்றும் நடனம் புரியும் தலைவன் சிவன் கண்ணுற்றருளி தங்களிலே பிரம விஷ்ணுக்கள் இருவரும் போரிடுகின்றனர். இவர்கள் தாமே கடவுள் என்று உலகம் உபசரிக்கும் புகழை விரும்பினார்கள் போலும். அதனாலே இவர்கள் தங்களது அறிவு அற்றுப்போயினர். நான் என்ற அகந்தை கொண்டனர். இதனால் என்ன விளைவாகும் என்பதை எண்ணுகின்றிலர். உண்மை யாது என உணர்கின்றிலர். குழந்தைகளைப்போல குரோதமுற்று இருவரும் கோபமாய் பெரும் போரினைப் புரிந்து நிற்பதால் உலகம் யாவற்றையும அழிக்கின்றனர். இவ்விடத்து இவர்களது செயலை நாம் இன்னமும் பார்த்து நின்றால் உலகங்களும் அதனிடம் வாழும் உயிர்களும் தீங்கடையும். அதுவன்றி யாவும் சிதைவாகி முடிவுற்றிடும். ஆதலின் எவற்றிற்கும் உயர்ந்த முழுதும் உண்மையான எமது நல்ல நிலையினை இவர்கட்கு நாம் எடுத்துக் காண்பித்து உணர்வுறச் செய்தால் அவ்விடத்து இவர்கள் எவராலும் சகிக்க முடியாத கொடும் போரை விடுப்பார்கள். உண்மையை உணர்ந்தால் தங்களை பெரும் பொருள் எனச் சொல்லி நிற்பதையும் கொடுமை கலந்த கோபத்தையும் நீங்கி செம்மை விளங்கிய நற்குணமுடையவராய் தாங்கள் சிறப்புற்றிருப்பர் என எம்மை ஆளுடைய சிவன் எண்ணினார்.

அவர் இவ்வாறு திருவுளம் கொள்ளும் அந்த அளவில் வந்து சேர்ந்து கொள்கின்றது மாசி மாதத்தில் உயர்ந்து விளங்கிய சூரியன் சந்திரனுடன் சேர்கின்ற அமாவாசைத் தினத்தின் முதனாளான சதுர்த்தி தினத்து நடு இரவு வேளை. எம்பிரான் சிவன் என்று மிகவும் புண்ணியம் நிறைந்த அருள் தன்மை கொண்டதுமான அந்த நடு இரவில் யாங்கள் கண்டு நடுக்கம்அடைய போரிட்ட எம் நடுவணாக ஓர் நெருப்பு மலைபோன்று சோதியாக தோன்றினார். அவ்விடம் தோன்றிய செழுமையாகும் சோதி மிகவும் முன்னைய போரினைப் புரிந்து நின்ற நாம் இருவரும் எம்படையாக விடுத்த பாசுபதப் படைகள் இரண்டையும் தம்மிடத்து ஈர்த்து மறைத்து நாம் அதைக் கண்டு சகித்திட முடியாத தன்மையாகி இருந்தலும் நாம் அது கண்டு கிட்டப்போயிடாது அஞ்சி அப்பால் அகன்றுபோய் எம்கோபமும் போரும் விடுத்து வானில் சோதியாய் நீளும் திருவுருவை நோக்கி நின்றோம். அப்போது நீளமிக ஓங்கிஅதிசயம்போலவந்தசோதியிடத்துநாங்கள் கேட்டிட வானிடை நின்றும் ஓர் அசரீரி வாக்கு நாம் தெளிவுற உடன் எழுந்தது. எப்படியெனில் சிறுவர்களே! உமது வலிமையை பகையசுரரின் முப்புரங்களையும் எரிசெய்த கடவுள் சிவனே கண்டு கொள்வான். இந்த சோதியின் அடியையும் முடியையும் வரன் முறையாக நீங்கள் தேடிஅறிந்து கொள்ளுங்கள், அவ்வாறு கண்டு தெளிவதில் உமது வீரத்தைக் காண்பியுங்கள் என்று அந்த வாக்கு இருந்தது. நாங்கள் அதனைக் கேட்டனம். எம்பால் பெருகி எழுகின்ற கோபம் யாவும் விடுத்தோம் என்றாலும் பின்னும் எம் அகந்தையை விட்டிட முடியவில்லை. மிகவும் கோபமுற்று யார் வீரர் என அறியும் படிபோரிட்ட எம்முன்பு இதோ இப்பொழுது அற்புதமானதொரு அருளின் சோதியாக தன்னைக் காண்பித்த இந்த கடவுள் உமது வலிமையின் திறத்தை நாமே காண்போம் என பெரிய வானிற் சொல்லினார். இது யாராக இருக்குமோ என்று நாம் எண்ணிப் பின்னரும் நாம் செய்த இப்போருக்கு இடையூறாக நீண்ட பெரிய இப்பூமியைக் கிழித்து கீழ் சென்றும் நிமிர்ந்து மேல் வானில் எழுந்தும் நீண்டு மாண்புடன் விளங்கிய இச் சோதி நாம் போரிடும் போது என்சிந்தையின் நின்றுதோன்றிய அறிவாளியான வேத முனிவன் நாரதன் சொல்லியவாறே நாம் காணும்படி வந்துள்ளது. ஆதலினால் எம்முடைய இயல்பிற்கு அப்பாற்பட்ட உயர்ந்த பிரமமாக இந்தச் சோதி இருக்கலாமோ என பேசி இது தீநில்லாத காற்றிடத்து உதித்த நெருப்பல்ல; இது யாது என்று இன்னமும் நாம் அறியமாட்டோம். ஆதலின் நாம் இருவரும் இப்பொழுதே இச் சோதியின் மூலத்தை முடிவை நாடி அதனைக் கண்டு கொள்வோம் என்று திருமாலும் நானும் ஓடித்தேடி முன்னாகக் காண்பதில் கொடிய சபதத்தைப் பேசினோம் எவ்வாறெனில் இச்சோதியின் முடியை அறிய நீண்ட பெருவானில் நாம் ஊடுருவிச் சென்றும் அத்துடன் அடியினை அறிந்திட பூமியை அகழ்ந்து சென்று ஓடிப் புகுந்து விரைவில் இச் சோதியின் அடியை முடியைத் தேடினால் அவற்றில் எது ஒன்றையேனும் நலம்பெற முன்னாகக் கண்டோரே பெருமையுடைய தலைவராவர். இதுதான் இனி துணிவாகும் என்று எங்களுக்குள் முன் யோசனை இலாதுவியந்து பேசிஅதன் படிசெய்யத்தீர்வாகி நின்றோம் அந்த நேரத்து தமியேன், சோதியின் முடியைக் காண்பேன் என்று கூறினேன். அதுகேட்ட திருமாலும் அவ்வாறாயின் தான் சோதியின் அடியினைக் காண்பேன் எனச் சொல்லி நின்றார். எம் செயல் எப்படியாயது என்றால் நடக்கப்பழகுகின்ற மழலைச்சொல் மாறாத குழந்தைகள் இருவர் வானத்தில் ஒளிமிகுந்த சூரியனைக் கையால் தீண்டும்படி துணிவுகொண்டவாறு போன்றிருந்தது.

**எமது அடி முடி காணும் போட்டியில் நாம் பேசிக்கொண்ட தீர்மானப் படி எனது தந்தையான நாராயணக்கடவுள் தான் சோதியின் அடியினைக் காண்பேன் என சொல்லியவாறு சோதியின் அடியினைக் காணவேண்டி; பூமியினைத் துளைத்து கீழ் நோக்கிப் போக வேண்டி அதற்காக தீயினை ஒத்த கொடிய சிவந்த கண்ணும்; திமிலுடைய ஏரியும்; யாரும் அச்சம் கொள்ளும்படி பேரோசத்தொனி கொள்ளும் கூரியவாயும், பிரகாசமுடைய பற்களும்; துலங்கிடும் தந்தமும் கரியமலை போன்ற மேனியும்; வேகமான நடையும் குறுகிய காலும்; வெள்ளைக் குழம்பும் கொண்ட ஓர் பன்றியாய வடிவினை திருமால்அன்று கொண்டார்.**

ஆயிரம் யோசனை உயரத்துடன் பருமனும் ஆயிரம் யோசனையாம்படி அந்தப் பன்றிவடிவாகி எழுந்து மூன்று இந்த உலகங்களையும் தனது இரண்டு அடியால் அளந்து கொண்ட திருமால் முன்னாக பூமியை அகழ்ந்து கீழே போய் தடவித்தடவி ஊடுருவிச் சென்று நிறைந்துள்ள இப் புவனங்கள் யாவற்றையும் ஒன்றன்பின் ஒன்றாக நீந்திக்கடந்து போயினார். அவ்வாறு பன்றிவடிவு கொண்ட திருமால் செல்லச் செல்ல சோதியின் அடியும் கீழே கீழே நீள நீள அடிப்பாகம் காணப்படாது போய்க்கொண்டிருந்தது.

பாதாள உலகங்களை நாடி திருமாலும் பன்றியாய் செல்லலும் நானும் முடியினைத் தேடிக் காண்பேன் எனப்பேசியவாறு அன்று அங்கு மேலே பறந்து செல்ல வேண்டி அதற்கென மிக்க பலம் வாய்ந்த வேகமுடன் பறக்கக் கூடியதொரு அன்னப்பறவை வடிவாகி சீக்கிரத்தில் எழுந்து வானில்போய் மேலான வான மீதுள்ள பெரும் புவனங்களை நோக்கிப் நான் மிக விரைவுடன் பறந்து போதலும் அந்த சோதியும் முன் நான் காணும் அதே தன்மை போன்றே நீள நீள மேலே இன்னமும் இன்னமும் சோதியும் முன்னம் போயது.

என் செயல் இப்படியாகி நான் தேடிக் கொண்டு விரைவுடன் வானில் போக: முன்னமொருபன்றிவடிவாகவலிமையுடன்பாதாளவைப்பினை ஊடு நவி நெருப்பாகத் தோன்றிய சோதியின் அடியினைக் காணும் பொருட்டு நினைந்துபோன திருமால் ஊடுருவிச் செல்லச்செல்ல பல நெடுங்காலம் சென்றது. ஆனாலும் சோதியின் அடியினை திருமால் காண்குருது போயினார்.

இதனால் பல புவனங்களையும் துளைத்துச் செல்வதாலே தனது பன்றி உருவத்தின் பற்கள் துளைத்து துளைத்து அலுத்து நொந்தன; பருத்த அப்பன்றியின் மேனி கடின உழைப்பால் சுருங்கி வாடி ஒடுங்கியது. அப்பன்றியினது பற்கள் நொந்து ஒடுங்கியது. வலிமை வீரம் யாவும் சிதறின. களைப்பு மிகுதியால் நீர் உண்ணும் படி தாகம் அடைந்தது. நெடுங்காலம் பாதாளமெல்லாம் துளைத்து ஊடுருவிப் போதலால் எழுந்த இளைப்பான மூச்சுடன் துயரம் வந்தது. இப்படியாகக் களைத்து அலுத்து இளைத்துச் சோர்ந்திடும் இந்நிலையால் திருமால் கொண்ட கொடிய கோபமும் மாறியது. அகந்தையும் அழிந்தது முன்னான நன்மை கொண்ட நல் உணர்வுகள் திருமால்பால் முழுதாக ஒருங்கே வந்து கொண்டன. அதனால் பன்றி வடிவான திருமால் தான் எண்ணிப் புரிந்த கருமம் தவறானது என நினைக்கும் படி நேர்ந்தது.

முன்னைய நல்லுணர்வுகள் தோன்றிடுதலும் திடீரெனத் தெளிவு பெற்று தான் வேண்டாத காரியம் செய்திட முற்பட்டேனே என எண்ணிய திருமால், இருளை ஒத்த பெருமேகத்தின் தோற்றம் கொண்டு உல்கம் எல்லாம் காக்கும் பெரும் கடவுளான திருமால் தான் கொண்ட பெரும் பன்றி வடிவை இது வேண்டாம் என நீக்கப் பார்த்தார் அது முடியவில்லை; அல்லது அந்த வடிவுடன் நிற்போமா எனத் எண்ணினார் அதற்கும் வலியிலாது வலிகுன்றிச் சோர்கின்றார்; பன்றி வடிவை நீக்க முடியாது தாங்கவும் முடியாதவழி திரும்பி நான் பூமிக்கு போகலாமா என எண்ணினார். அதற்கும் மேலே எழுந்து போகவும் சத்தியற்றார்: ஆகவே களைத்துச் சோர்ந்து செயலற்று என் செய்ய என நினைந்து தன்னையும் மறந்து நின்று சிவனே நான் என் செய்வேன் உன் அபயம் அபயம் என சிவன் திருவடிகளைச் சிந்தித்து அன்பால் உருகி நின்று போற்றுகின்றார்.

யாவராலும் என்றும் உணர்வரிய எம்பெருமானே சிவனே உன் திருவுடைய திருவடிகளை அன்றி அடியேனுக்கு காப்பு வேறு இல்லை. அதனை அர்ச்சனை புரிந்திடவும் எனது வலிமைகள் யாவும் குன்றிடுகின்றது; பகவானே! என் பிழைகளைப் பொறுத்திடுவாய். அடியேன் ஒன்றும் நான் அறியமாட்டேன் என்று திருமால் தனது உள்ளம் நொந்து போற்றுதல் புரிந்தார். ஆன நேரத்தில் சிவபெருமான் திருவருளால் தேன்துளிக்கும் குளிர்ந்த மாலையணிந்த திருமால் வலுப்பெற்றாராய் பன்றி வடிவுடன் மேல் எழுந்து பூமியின் பாலாக வந்து வானில் போகும் சோதிக்கு அயலாக சோதியை வணங்கி நின்றார். அது நிற்க யான் முன் பின்னிடாத வகையால் பெரும் சபதம் இவைகளைப் பேசி அன்னப்பறவை வடிவாகி வானில் எழுந்து சென்று ஆயிரம் ஆண்டுகள் வரை எங்கும் வானில் திரிந்து திரிந்து தேடியும் குன்றாத சோதிச் சுடரின் முடியைக் கூடமுடியாது போயினேன். வினையேன் யானும் திரும்பி வரும்படி நினையேன். மீண்டு போனால் எமது சபதமும் பழுதாகும். அதுவன்றியும் மிகத் துணிந்து முன்னாக பெருகும் சுடரின் முதல் கண்டு நாராயணக் கடவுள் தானே பிரமம் என ஆகிவிடுவார். அவருக்கு என்னை அடிமை எனக் கூறுவார்கள். எனது இந்த பெரும்பாடான வலிமைகள் யாவும் வீணாக அழிவெய்துமே! என நான் நினைந்தேன். எந்நாள்வரை செல்லினும் செல்லட்டும். இன்னும் நான் வானில் போய் சோதியின் பொன்னார்ந்த முடி கண்ட பின் அல்லால் போகமாட்டேன் என நான் நினைந்து; அதனைக் காணும்படி மேலே மேலே போதலும் எனது உள்ளம் வேதனையால் வெம்பி மேலான எனது உயிரும் உலைந்து எனது பெலமும் அழிந்து. உடல்சோர்ந்தது. எனது போக்கின் வேதனையால் கண்ணும் கழன்றது; சிறகுகள் நொந்தன, காலும் ஒய்ந்தது. சிந்தனைகள் தடுமாறின. அது நேரத்தில் அங்கு எழுந்து போகும் சோதியின் உள் நின்று சித்தர்கள் எனும்படி வடிவுடையராய் சிலர் விரைவில் வந்து தோன்றி வானின் உயரப்போய் நின்று இது வார்த்தை ஒன்றினை அருளின் தொடர்பால் சொல்லலுற்றார்கள். வான்திகழும் இப்பரஞ்சோதியின் முடியினை; கடலின் இடத்து உள்ள மீனை வயிறார உண்கின்றதற்கு திரிகின்றதொரு வெள்ளை அன்னப்பறவை தானும் உணர்ந்தறியப் போகின்றது. இதன் சிறகுகள் ஓய்வின்றிப் பறத்தலால் தளர்ந்து அதன் தைரியம் போனாலும் அதைக்கூடஎன்னாத படி இன்னமும் சோதியின் முடியினை நாடவருகின்றது போலும்? உண்மை

(ம: ப: பா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக இந்த அன்னப்பறவைக்கு இச் செயல் அறிவின்மையாகும். இது அல்லாமல் பின்னுல் வேறென்றுளதோ? இது இப்படித் துணிவுற்றதொரு தன்மையை நாம் கண்டால் இத்துடன் இன்னும் சிலநேரம் மேல் பறந்திடும் என்றுல் இது இறந்திடும். இங்கு சிறந்து விளங்கிய இச் சோதியைச் சிவன் என்று தன்மனதில் இப்பறவை எண்ணுதோ? இதைப்போன்று முன் திருமால் என்பவனும் அடியினை அறியுமாறு பூமியை உருவிப் பிளந்து விரைவாகப் போனுன். போய் அவன் அந்த சோதியின் மூலத்தை அறியமுடியாமல் தனது வலிமையாவும் அற்று நல்லொழுக்கமான சீலம் அவனை அடைந்து கொள்ள சிவனே உன் அபயம் யானே என்று பூமியில் திரும்பி வந்து அனலாய இச்சோதி மலையை அடைந்து நின்றுன். ஆகவே முன்னே இதனைப் பிறப்பித்த மூர்த்தியான சிவனே இந்த அன்னத்திற்கு அதன் மனதில்கொண்ட அகந்தையாகும்இந்த அழுக்கினை மாற்றி அருள் செய்தால் இப்பறவை உய்யும். அல்லாது சரிவராது என்னலும் நானும் அச்சித்தர்கள் கூறியது கேட்டு தலைமைபெற முயன்ற எனது மனதில் கொண்ட கொடிய அந்த அழுக்காகும் ஆசைநீங்கி, அந்தச் சித்தர்களை போற்றி செய்து பணிந்து நின்றேன். ஈசன் சிவன் அருளினுலே இச் சித்தர்கள் இவைகளைக் கூறிஞராய் அவர்கள் போதலோடும்; அதுவேளை நான் பிழையான வழியாகும் அகந்தை கொள்ளல் ஆதியான பாசம் விளைத்திடும் குற்றச்செயல்யாவற்றையும் வேருடன் களைந்து: சிவன் புகழ்பாடி ஏத்தி அன்புகொண்டு பூசனை புரியுமாறு எண்ணி மீண்டுவந்தேன். நான் வந்து திருமாலைச் சேர்ந்து சொன்னேன்; நாமிருவரும் உயர்ந்த பெரும் பொருள் நாங்களே என நினைந்து அதை நிலை நாட்ட பெரும் போர்புரிந்து அங்குவந்த நாரதமுனிவன் வார்த்தையும் உணர்ந்து கொள்ளாமல் போனுமே! அதுவன்றி எமது தந்தை எமக்காக சோதியாய் தோன்றி வந்துளார் எனற அவர் வருகையை அறியாமல் அவரின் அடியும் முடியும் தேடலுற்றேம்! நாம் எமது அறியாமையால் ஆங்காரங்கொண்டுமுடிவாகிப் போகும் காலையில் அப் பெருமான் அருளால் அவரை உணர்ந்து புகழ்ந்து ஏத்திேனும்.பூமியை ஊடுருவிப்பிளந்தும் வானில் பறந்தும் அடியையும் முடியையும் உணரமாட்டோம். மீண்டு அப்பெருமான் அருளால் வலிபெற்றுத் திரும்பியுள்ளோம். ஆதலால் இனி இவ்விடத்து சிவனை வேதவிதிப்படி வழிபட்டு அவன் அருளால் இருவோமும் அவன் தோற்றம் காணுவோம் எனயான் சொல்ல அதுகேட்ட திருமாலும் அதற்கு இசைந்து அப்படியே வழிபட்டு காண்போம் என்றுன். நாம் இருவரும் சிவபெருமான் திருஉருவை வேதமுறையால் தாபித்து வாசமுடைய பூ திருமஞ்சன நீர் சந்தனம் விளக்கு ஆதியான பொருள்களைத்தேடி நிகரற்ற பூசனை புரிந்து போற்றி செய்து வணங்குதலும் அதுவேளை எமக்கு எதிராக நேர் தோன்றும் சோதிக்கு அருகாக எந்தை ஈசன் சிவன் தோன்றி வந்தருளினுர். கருமை கொண்ட நீல கண்டமும் மானும் மழுவாயுதமும் ஏந்திய திருக்கரமுடன் அபயமும் வரதமும் ஆன என்றும் முடிவிலாது சிறந்த கைகளும் நான்கு தோள்களும் விளங்கிடும் பாம்பாகிய குண்டலமும் செக்கரை ஒத்த இளம் பிறை சூடிய செஞ்சடையும் உமையம்மையார் ஓர் பாகமுகமாக முக்கண்ணுடைய ஈசன் சிவன் யாம் காணும்படி எம்முன்பு தோன்றி பேரருள் புரிந்தான். அந்த நேரத்தில் யாங்கள் இருவரும் அவனுடைய திருவடி மலர்களை வணங்கி செப்பமுற முன்னின்று அப்பெருமானுடைய பேரருளில் மூழ்கி இன்புற்று இதனைச் சொன்னேம், எம்பெருமானே உண்மையின் நிலையான அன்பில்லாத போது தேவரீரது இயல்பு யார்க்கும் தெரிந்திட முடியாது. வேதங்களும் உமது இயல்பு இவ்வகை எனத்தெளிந்தறிய முடியாது ஆழ்ந்து அகன்று தேடி தடுமாறுகின்ற தெனில் யாம் அதனைக்காண்டற்கு இலேசானதோ! ஐயனே எமது மனம் மயங்கி நல்லறிவு கொளாது போரிடும் காலத்து தேவரீர் எமது முன்பாக செந்நிறமுடைய தீபின்வடிவாகத் வந்தருளி எமக்கு உற்றபழைய நல்லறிவையும் தந்து உம்மையும் உணர்த்தி நாம் செய்த பெரும் போரினையும் நீக்கினீர். இதை எண்ணுங்கால் நாமெல்லாம் ஓர் இயந்திரம். அந்த இயந்திரத்தை உள்நின்று இயங்குகின்றவன் நீ அல்லவோ. பெருமானே. நின்னை உணரும் உணர்வை நீ தந்தால் நாம் பின்னர் உன்னை உணர்வோம் அன்றி எமது முயற்சியால் அது ஆகாது, ஆதலினுல் சிறியேங்கள் நாங்கள் செய்த தீய செயல்களை எல்லாம் பொறுத்தருள்வாய். ஐயனே தமது சிறுகுழந்தை என்னதான் செய்திடினும் அப்பிள்ளையின் பெற்றேர்க்கு அச்செயல் இனிதானது அல்லவோ! இனிய பண்பிலாத கொடுமை கொண்ட இரும்பினை நவத்தில் வல்லமையுடையோன் பொன்னுக்கி விட்ட அத்தன்மை போன்று தீயகுணம் நிறைந்த எமை நல்லருள் புரிந்து படைத்தல் காத்தல் இவற்றைச் செய்கின்ற தலைமையுடைய கடவுளர் ஆக்கினுய். அவ்வாறு நாம் அந்த தலைமைப்பாட்டை எமக்குச் செய்தஉம்மையேமறந்தோம். யாங்களும் உயிர்வர்க்கம் ஆவோம். ஆதலின்முன்னுள் தோன்றிய உயிர்வர்க்கமானஎங்களையும் பிணித்த பாசத் தொடரை நாம் அகற்றவல்லமை உடையோமோ?

என்று இன்னவகையாக கருணை நிறைந்த வடிவாகி எண்ணுதற்கரிய வடிவாகி எமக்கு முன் நின்று அருள்புரிந்த ஆனந்த தேனுய அம்மைஅப்பனும் முழுமுதற் பெருமானை எல்லாம் உணராது உணர்கின்ற சோதியை நாம் துதித்தலும்; அது வேளை மேருமலையை வில்லாக கொண்டதொரு கடவுள் எம்மை நேர்நோக்கி; நீங்கள் செய்த அவைகளை நாம் அக்கறை கொள்ளோம், அதற்காக ஒன்றும் நீர் எண்ண வேண்டாம். உமது பெரும் பூசையை நாம் உவந்து ஏற்றனம். முன்னர்க்காலம் தொட்டு உலகினைப் படைத்திட காத்திட அன்று கொடுத்த அப்பதவிகளை இன்னமும் நாம் திரும்பவும் உமக்கு கொடுத்துள்ளோம்.

நீவிர் வேண்டிய நல்வரங்களுங்கள் தருவோம் என்று எம்பிரான் கூறியருளலும் நாமும் அவரை நோக்கி வெட்ட வெளியில் நின்று நடமாடிடும் கடவுளே! நினது திருவடியே காப்பாகக் கொண்டிடும் தலையான பேரன்பை எமக்குத் தந்தருள்க என்றலும்; எமக்கு அவ்வாறே நல்லருள் புரிந்து காணப் பெறற்கு நற்தகுதிகொண்ட நெருப்பாய சோதியுள் இமைப்பினில் மறைந்தருளினுர் சிவன்.

## சோதி சுருங்கி சிவலிங்க உருவமாதல்

எம்பெருமான் சோதிபுட்கலந்த காலத்தில் யாங்களும் அவர் திருமுன்பு தொழுது எழுகின்ற நேரத்தில்; நாங்கள் சலனம் கொள்ளும் தன்மையாக முன்பு ஒருகால் அடிமுடி தேடும்படி தீயின் உருவாய் மலர்ந்த பேரொளியானது இப்போது வானின் நின்று சுருங்கி வந்து ஓர் சிவலிங்கருபமாய மலையானது. அதன் அற்புதம் கண்டு இந்த உலகமெலாம் வணங்கித் துதித்துப்போற்றிக் கொண்டது.

அவ்வாறு சோதி சுருங்கி அமைந்த மலைவடிவாய சிவலிங்கருபத்தினை நாம் அணுகி முன்னின்று மும்முறைவலம் செய்து முறையாகத் தலையால் தொழுது வணங்கி எழுந்து பின்னர் எமது பதங்களில் நாம் சென்றேம். பின்னர் எந்தை ஈசன் சிவனை எக்காலமும் மறக்கிலம் என்றும் அவனையே பெரிதும் போற்றுவோம்.

திருமாலும் நானும் சென்று அடியும் முடியும் தேடிய சோதி மலையே சுருங்கி வந்து இவ்வுலகில் பலரும் கண்டு தரிசித்து உய்யும் படியானதொரு தலமாக இன்று திருஅண்ணமலை எனும்படி நின்றுள்ளது. அவ்வொளி தோன்றிய இரவே சிவராத்திரி ஆயது. அன்றைய சிவராத்திரி நாளில் ஈசனைப் பூசித்து பலரும் உய்தியை அடைந்துள்ளனர்.

ஆதலால் தக்கனே சிவனருளைப் பெற்றுல் அப்பெருமானுடைய இயல்பை அறியும் அறிவுபெறப்பெறுவார். அப்படியாக அப்பெருமானுடைய அருள்பெருது இருப்பின் அவர் பல கலைகளை அறிந்து என்ன பிரயோசனம். வேதங்களை ஆராய்ந்து படித்காலும் என்ன பிரயோசனம், அவர்கள் உண்மையான பக்தி செறிந்த நற்பண்புடைய வழிபாடு இல்லா திருந்தால் ஓர் இறையளவேனும் அப்பெருமானின் நிலையினை விளங்கார்கள். அவ்வாருக பல வற்றைக் கற்றுலும் பேதமை உடையவரும் சிவன் அருள்கைகூடாத அவர்களே அல்லாது வேறுபிறரார்.

ஆகவே மகனே எம்பெருமானை அறிகின்றதற்கு ஒரே ஒரு வழியாவது அப்பெருமானை அன்பினுல் பூசிப்பது. அதுதான் வேதவழி வந்த ஆகமம் விதித்த வாறு சிவன் உருவினைத்த தாபித்து நல்ல திருமஞ்சன நீர் பூ தீபம் இவை கொண்டு நல் ஒழுக்கம் தலைக் கொண்டு பூசிப்பதாகும். இந்த ஒரு திருவருள் பெருக்கமானநிலை மனத்தில் உலக பாசத்தின் அழுக்கிருக்கும் தனையும் கை கூடாது.

பாசங்களை பெருகவைக்கும் செயல்களைப் புரிந்து பிறவித் துயரில் மூழ்கின்ற வாழ்வுடையவராய் மலபரிபாக மில்லாதவருக்கு அப்பெருமானுடைய அருள் எய்திடாது. ஆனுல் பாவமும் போகங்களை விளைவிக்கும் புண்ணியமும் இரண்டும் சமமாய் வருகின்ற இருவினை ஒப்பு மலபரிபாகராய அவர்கட்கே ஈசன் அருள் நிலை கை கூடும், ஜீவன்முத்தர்எனப்படும் மலபரிபாகரும் இவர்களே.

ஆனமையால் தக்கனே நீயும் உனது பழைய வினைகள் விட்டு நீங்குகின்றமையால் எம்பிரானுடைய நிலமையை ஆராய்கின்ற பழைய நல்லுணர்வு உனக்கு இன்று வந்து கூடியது. அப்பெருமானே எமது தாய். எமது தந்தை. எமது குரு, எமது கடவுள், எமது தவம் மேலான செல்வம் இவையாவும் ஆவர் அவ்வாறுனமுழுமுதற் பெருமானையே நீ இன்னமும் துணையாக சேர்வாய் என்றுர் பிரமதேவர்.

இவ்வாறு பிரமதேவர் தமக்கு வந்த அகந்தையின் பெருக்கமும் அதனுலே தான் பட்டதுயரமும் ஆனுல் எல்லாம் அறிகின்ற எம்பிரான் சிவன் அது உணர்ந்து பிரமதேவரைத் தெளிய வைத்து தனது அருமந்த காட்சி கொடுத்த வரலாற்றையும் மிகு சுருக்கமாக எடுத்து தனது மகன்தக்கனுக்கு சொல்லி அவனை நல்லுணர்வுடன் தெளியவைக்கின்றுர். அதன் பின்னுக தக்கனும் தெளிந்து நல் உணர்வு வரப்பெற்று பிரமதேவரிடம் விடை பெற்றுச் சென்று காசியை அடைந்து சிவன் அருள் உருவைத்தாபித்து வணங்கி பூசனை புரிந்து அதன் பேற்றுல் ஆட்டுத்தலை நீங்கி நல்ல வாழ்வு பெற்று சிவகணங்கட்கு நாதனுன்.

சிவராத்திரி விரதம் மிகவும் சிறந்த ஒரு விரதம் அன்று. இரவு முழுவதும் சிவனை அர்ச்சித்து வழிபட்டுஅநேகர் உய்ந்தனர். இரவில் எம்பெருமானை நான்கு யாமமும் பூசித்தல் நலம். இந்தப் பூசையின் போது நான்கு யாமத்திற்கும் நாலுவிதமான மலரும் நான்கு விதமான திருவமுதும் கொண்டு பூசிப்பது நன்று. அந்த வகை நான்கு அமுதும் மலரும் கீழே தரப்படுகின்றன.

முதலாம் யாமம்— மலர் — வில்வம் — திரு அமுது — பயற்றம் பருப்புச் சாதம்
இரண்டாம்யாமம் — மலர் — தாமரை திருவமுது — பால்சாதம்
மூன்றும் யாமம் — மலர் மல்லிகை திருவமுது எள்ளுச்சாதம்.
நான்காம் யாமம் — மலர் நந்தியாவட்டம் திருவமுது — வெண்சாதம்.

இந்த சிவராத்திரி காலத்தில் ஸ்ரீபஞ்சாட்சர (திருவைந்தெழுத்து) ஜெபம் நன்று. நன்கு விளங்கும் உருத்திராக்க மாலையைச் திருவைந்தெழுத்து செபித்தலுடன் எண்ணுதல் நன்று. இந்த விதி முறையாகவே திருமாலும். பிரமனும் சோதி கண்டருளி தேடி முடியாது பின்னர் வந்து சிவலிங்கம் தாபித்து பூசை புரிந்தார் என்பது வரலாறு.

**ஜோதி சிவம் பரம்**
**ஜோதி சிவம் சுகம்**
**ஜோதி சிவம் நயம்.**

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கு உயரப்புலத்தில் இருக்கும் இலங்கை மணி சைவநூற் பகத்தின் சார்பில் அதன் உரிமையாளர் திரு. வை நல்லையா (இளைப்பாறிய கூட்டுறவு பரிசோதகர்) அவர்களால் புனிதவளன் ஐத்தோலிக்க அச்சகத்தில் ப்ரதிபண்ணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org